# அரண்

அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்
ARAN International e-Journal of Tamil Research

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

(Peer Reviewed Journal Multidisciplinary)

ISSN: 2582-399X



காலாண்டு இதழ்
(ஜனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர்)
ஆகிய மாதங்களில் வெளிவரும்

Vol:8 Issue :30 April 2026

கோட்டை:8 வாயில்:30 ஏப்ரல் 2026

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

International e Journal of Tamil Research

# EDITORIAL BOARD

Founder / Editor in Chief

**Dr PRIYAKRISHNAN**

Publisher

**MR P. JAYAKRISHNAN**

Editorial Board Members

**Dr V SELVAKUMAR**

Professor And Head of The Department of Maritime History and Marine Archaeology Tamil University, Thanjavur, TamilNadu, India
selvakumar.v@tamiluniversity.ac.in

**Dr. S. KAVITHA**

School of Indian Languages and Comparative Literature,Tamil University, Thanjavur. TamilNadu, India

**Dr.K.DAYANIDHI**

Assistant Professor & Head i/c , Department of Vaishnavism , University of Madras, TamilNadu, India. dayanidhi@unom.ac.in

**Dr O.MUTHIAH**

Professor of Tamil, The Gandhigram Rural Institute (Deemed to be University) Gandhigram - 624 302 Dindigul District, TAMIL NADU

**DR UMADEVI**

Professor In Tamil, Department of Modern Indian Languages And Literery Studies University of Delhi,Delhi . dumadevi@mil.du.ac.in

Copy Right @ Aran international e journal of Tamil Research/Dr. Priyakrishnan

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

International e Journal of Tamil Research

# EDITORIAL BOARD

**DR JAGADEESAN.T.**

Assistant Professor of Tamil, Department of Indian Languages,
Faculty of Arts, Banaras Hindu University,
Varanasi- 221005, Uttar Pradesh,India.

**DR SENTHIL PRAKASH.S**

Teacher – in- charge/Assistant professor (SG),Department of
Tamil, Institute of Languages, Literature& culture,
Visva – Bharathi University,Santiniketan,West
Bengal, India -731235

**DR R TAMILSELVAN**

Assistant professor, Aligarh Muslim University, Uttar Pradesh,India-202002

**Dr SWARNAVEL ESWARAN**

Associate Professor Departments of English, and Media and Information
Michigan State University. USA. eswaran@msu.edu

**Dr (Ms.) NILANKA LIYANAGE**

Senior Lecturer in Dance ,Department of Dance,Drame&Theatre Arts,
Swamy Vipulananda Institute of Aesthetic Stidies,Eastern University Srilanka

**Mrs THULSIVANTHANA UDAYASHANKAR**

Senior lecturer Gr II in English, Swamy Vipulananda Institute of
Aesthetic Stidies ,Eastern University, Srilanka

அரண்
பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்
Aran
International e Journal of Tamil Research

# EDITORIAL BOARD

**Dr B. DHANANJAYAN**
Associate Professor, Sir Theagaraya College, Old Washermenpet, Chennai - 600 021.

**Dr P.SEKAR**
Assistant Professor,Department of Education,Govt.Institute of Advanced Study in Education,Saidapet,Chennai-600015.sekar@iasetamilnadu.ac.in

நிறுவனர்/பதிப்பாளர்/நிர்வாக ஆசிரியர்
இதழாக்கம்
திரு ப. ஜெயகிருஷ்ணன்
முதன்மை ஆசிரியர்
முனைவர் பிரியாகிருஷ்ணன்
+917299587879
www.aranejournal.com
aranjournal@gmail.com

அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழில் வெளிவரும் ஆய்வுக்கட்டுரைகள் அனைத்தும் (Peer Review)பீர் ரிவியூ செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

# சஞ்சாரம் நாவலில் இசைக்குறிப்புகள்

## *Musical notes in the novel Sanchaaram*

***Author: Santhanalakshmi G,*** *Part-Time Research scholar, Department of Tamil, Bishop Heber College (Autonomous A++), Affiliated to Bharathidasan University, Trichy, Tamilnadu, India. ORCid: https://orcid.org/0009-0009-3112-7796*

***Guide: Dr J. Aruna,*** *Assistant professor,Department of Tamil, Bishop Heber College (Autonomous A++),Affiliated to Bharathidasan University, Trichy, Tamilnadu, India.ORCid: https://orcid.org/0009-0000-4881-3164*

**கட்டுரையாளர்:** கோ. சந்தானலெட்சுமி, (Reg.No: BDU2120632779355), BDU/PhD/20/0456, பகுதிநேர முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழாய்வுத்துறை, பிஷப் ஹீபர் கல்லூரி (தன்னாட்சி A++),பாரதிதாசன் பல்கலைக்கழகத்துடன் இணைவுப்பெற்றது, திருச்சிராப்பள்ளி, தமிழ்நாடு, இந்தியா

**நெறியாளர்:** முனைவர் : ஜா. அருணா,உதவிப்பேராசிரியர்,தமிழாய்வுத்துறை, பிஷப் ஹீபர் கல்லூரி (தன்னாட்சி A++),பாரதிதாசன் பல்கலைக்கழகத்துடன் இணைவுப்பெற்றது, திருச்சிராப்பள்ளி, தமிழ்நாடு, இந்தியா.

***Abstract***

*It was only after humankind attained civilization that people became interested in the arts and began to cultivate them. Among these arts, music came to be regarded as the most special.*

*Religious scholars believe that sound originated first in the world. With subtle understanding, they distinguished sound from nature and developed its melodic qualities, finding great pleasure in it. Music is an excellent medium that enables people to express their thoughts without words.*

*The earliest musical instruments, associated with folk traditions and considered highly significant, are the nadaswaram and the thavil.*

*Music, regarded as divine, was so enchanting that it became closely associated with religion. It was practiced in temples and later performed at various festivals, gradually gaining popularity among the people.*

*This article seeks to explain the nature of Indian music and its connection with people, particularly with reference to the Nadhaswaram and Thavil, along with the commentary in S. Radhakrishnan's Sancharam.*

***Keywords:***

*Auspicious music, Nadaswaram, Arid, Musical Art, Spiritual, Nadaswaram Artists, Thavil, Mallari, Melodic musical modes, Musical Instruments, Temple festival*

***ஆய்வுச்சுருக்கம்:***

மனிதன் நாகரிகம் அடைந்த பின்னரே கலையின்மீது ஆர்வம் கொண்டு அதனை வளர்க்கத் துவங்கினான். அவன் கண்டறிந்த பலவகையான கலைகளிலும் இசைக்கலையே பழமை வாய்ந்ததும் சிறப்பு மிகுந்ததுமாகப் போற்றப்படுகிறது.

உலகில் ஒலியே முதலில் தோன்றியது என்பது சமயவாதிகள் கருத்தாகும். இயற்கையிலிருந்து ஒலியினை நுண்ணிய அறிவினோடு பிரித்து, அதில் பல்வேறான இன்னிசைப் பண்களைப் புகுத்தி, அதில் இன்பம் கண்டான். தான் கருதிய எண்ணங்களை வார்த்தைகளின்றி இசையின் மூலம் வெளிப்படுத்த உதவும் சிறந்த கருவியாக இசை அமைகின்றது. இசைக்கருவிகளில் பழமையானதும், நாட்டுப்புறக் கலைகளோடும் தொடர்புடையதாகவும், முதன்மையானதாகவும் கருதப்படுவது நாதசுரமும், தவிலும் ஆகும்.

இசை மனிதனின் உள்ளத்தினை மயக்கும் ஆற்றல் கொண்டமையால், இறையோடு தொடர்புபடுத்தித் தங்களது சமயங்களை இசையின்வழி வளர்த்துக்கொண்டனர். திருக்கோயில்களில் மங்கல இசையாக வளர்ச்சிப்பெற்று, நாளடைவில் பல்வேறு விழாக்களிலும் இடம்பெறும் வகையில் மக்களிடம் செல்வாக்குப் பெற்றது.

இவ்இசையின் தன்மையினையும், மக்களோடு இசை கொண்டுள்ள தொடர்பினையும், குறிப்பாக நாதசுரம் மற்றும் தவில் ஆகியவை கரிசல் மண்ணின் கலாச்சாரத்தினை எடுத்தியம்பும் பாங்கினையும் எஸ். ராமகிருஷ்ணன் அவர்கள் சஞ்சாரம் நாவலில் எடுத்துரைப்பதினை விளக்கும் நோக்கோடு இவ்ஆய்வு அமைகின்றது. மேலும் ஆய்வின் நிறைவில் முடிவுரை மற்றும் துணை நின்ற நூல்கள் குறித்த விவரங்களும் தரப்பட்டுள்ளன.

***திறவுச்சொற்கள்:*** மங்கல இசை, நாதசுரம், கரிசல் மண், இசைக்கலை, இறையுணர்வு, நாதசுரக்கலைஞர்கள், தவில், மல்லாரி, இன்னிசைப்பண்கள், இசைக்கருவிகள், கோவில் திருவிழா.

***முன்னுரை:***

மனிதனுடைய மனம் அழகுணர்ச்சி உடையது. இனிமையானவற்றை விரும்புவது. உலக இயல்புகளை உணர்ந்துகொண்டு, அவற்றைப் பிறர் விரும்பும் வகையில் அழகுணர்வுடன் வெளிப்படுத்துவது கலையாகும். கலைகளுடைய ஆற்றல் அளப்பறியது. மனித மனத்தில் இரசனை தொடங்கிய காலந்தொட்டு இன்றுவரை கலைகள் மக்களுடைய வாழ்வில் உயரிய இடத்தினைப் பெற்றுள்ளது. மனித நாகரிகத்தின் சிறப்பினையும்,

பண்பாட்டுத் தன்மையினையும் கலைகளைக்கொண்டே நாம் உணர்ந்துவிட முடிகின்றது. கலைகள் உலகத்தின் இயல்புகளையும், மனித உள்ளத்தின் உணர்ச்சிகளையும் வெளிப்படுத்திக் காட்டிவிடுகின்றன. இக்கலைகளில் பல வகைகள் உண்டு. இவற்றில் இசைக்கலை தனித்த இடத்தைப் பெறுகின்றது. இசைக்கப்படும் இசைக்கருவிகளைப் பொறுத்தும், அவை பிறந்த இடத்தின் தன்மை பொறுத்தும,; மண்மனம் மாறாமல் தம் மக்களுடைய கலாச்சார சிறப்பியல்பினை இசையின் வாயிலாக எடுத்தியம்புகின்றன. எஸ். ராமகிருஷ்ணன் அவர்களுடைய சஞ்சாரம் நாவலில், கரிசல் நில மக்களுடைய கலாச்சாரத்தின் ஊடாக, தமிழ் சமூகத்தின் அடையாளமாகக் கருதப்படும் நாதசுரக் கலையைப் பற்றி எடுத்துரைக்கும் செய்திகளை விளக்கும் விதமே இவ்ஆய்வின் அடித்தளமாக அமைகின்றது.

**இசைக்கலையின் தோற்றம்:**

மனிதன் இன்பம் மற்றும் துன்ப உணர்வுகளுக்கு ஆட்படும்போது, அவனிடமிருந்து பேச்சொலி போன்றில்லாமல் உணர்ச்சிப் பொருளுடைய தொடரொலிகள் தோன்றுகின்றன. இவை ஒலிப்பெருக்கமும் சுவைப்பெருக்கமும் உடையதாக அமைகின்றன. இதனை உணர்ந்தறியும் ஆற்றல் உடையவர்கள் அதன் சுவையினை அனுபவித்திருப்பர். இத்தகைய ஒலிச்சுவையுணர்வு நிலையினில் இசைக்கலையின் தொடக்கமானது அமைகின்றது.

இசையால் விழாக்கள் சிறப்படைகின்றன. மக்கள் மனம் மகிழ்ச்சியில் ஆழ்த்த, இசை ஒரு கருவியாகப் பயன்படுகின்றது. ஆரம்ப நிலையில் கோவில் திருவிழாக்களில் மட்டுமே இசைக்கப்பட்டு வந்த இசை, மக்களிடம் கிடைத்த வரவேற்பு மிகுதியால் பல்வேறு இடங்களில் பரவலாக வாசிக்கக்கூடிய வளர்ந்த நிலையினை எட்டியுள்ளது எனலாம். இசையை இறையோடு தொடர்புபடுத்தி அறியும் வழக்கம் உள்ளது. இதனால்தான் ஆழ்வார்களும், நாயன்மார்களும் தனது பக்தி நிலையினை இசையால் வெளிப்படுத்திய தன்மையை நாம் அறிய முடிகின்றது.

**இசை கடவுளோடு பேசும் மொழி:**

மக்களிடையே, மதச்செய்திகளைச் சார்ந்த பாடல்களுக்கு இசை அமைக்கப்பட்டது. பல்லவர் காலத்தில் சிவன் கோவில்களில் இசையோடு தேவாரம் பாடப்பட்டது. வைணவப் பாடல்களின் தொகுதியாகக் கருதப்படும் நாலாயிரத் திவ்யப்பிரபந்தம் முழுமைக்கும் இசை அமைக்கப்பட்டது. மக்களை எளிதில் கவரக்கூடிய வகையில், இதில் நாட்டுப்புற இசைக்கூறுகளையும் பக்திகாலக் கவிஞர்கள் பயன்படுத்தினர். எனவே இந்துக்கள் கடவுளிடம் தனது பக்தி நிலையினை வெளிப்படுத்த இசையே முதன்மையான கருவியென நம்பிக்கை கொண்டிருந்தனர். இதனை மெய்ப்பிக்கும் வகையில், இசைதான் கடவுளோடு பேசும் மொழி, அது இந்துக்களின் நம்பிக்கை என்றவாறு சஞ்சாரம் நாவல் எடுத்துரைக்கின்றது.

**இசையின் இனிமை:**

பயன்மிகுந்த கலைகளில் சிறப்பு வாய்ந்ததாக அமைவது இசைக்கலையாகும். இசை என்ற சொல்லுக்கு மனதோடு பொருந்துதல் என்ற பொருள்படுகின்றது. இந்த இனிமையான இசையானது எழில் மிக்கதாகவும், மக்களுக்கு மகிழ்ச்சியும், எழுச்சியும் ஊட்டுவதாகவும் அமையப்பெறுவதாய், உள்ளத்தைக் கவர்ந்து தன்வயப்படுத்துவதாகவும் அமைவது வரவேற்கத்தக்கதாக அமைகின்றது. இதனை, "மனித குலத்தின் வரப்பிரசாதமாக, இன்சுவை அமுதமாக, ஆனந்தத் தேனாக, இசைப்பாட்டின் இன்ப ஊற்று மக்களின் மனத்தை மகிழ்விக்கிறது." (தமிழர் இசை, ப.15) என்றவாறு இசையின் சிறப்பினை விளக்கும் வகையில் மயிலைசீனி. வேங்கடசாமி குறிப்பிடுவதும் இங்கு நோக்கத்தக்கதாக அமைகின்றது.

இதனை சஞ்சாரம் நாவலில், கரிசலின் ஆன்மாவாக இசை திகழ்கிறது என்கிறார் ஆசிரியர். நாதசுர இசையானது, மண்ணின் துயரத்தை வெளிப்படுத்துகிறது. இது மறைந்துபோன உறவுகளையும், முடிந்துபோன சந்தோசங்களையும் நினைவூட்டுகின்றன. இது துயரத்தின் இசையாக மட்டுமல்லாமல் சந்தோசத்தின் இசையாகவும், இரகசியத்தின் இசையாகவும், நிராசையின் இசையாகவும், மற்றும் வெயிலின் சங்கீதமாகவும் கரிசல் மக்களுடைய வாழ்வில் ஒவ்வொரு விதமாக அவர்களை உணர வைக்கிறது என்றவாறு ஆசிரியர் எடுத்துரைக்கின்றார்.

**இசையின் மீதுள்ள நம்பிக்கை:**

இசையானது எளிமையாக உயிர்களைத் தன்பால் இசைவிக்கவும், உயர்ந்த நிலையில் இறைவனைத் தன்பால் இசைவிக்கவும், இசையின் ஆற்றலை மக்கள் பயன்படுத்தினர். இசையின் ஆற்றலால் மனிதனை வசப்படுத்தி, அவர்களை இறை உணர்வுக்கு வழி செலுத்த முடியும் என சமயங்களும் நம்பின. இசையால் பல நிகழ்வுகள் நடந்தேறியதாகப் பேசப்படுகின்றன. இசையினால் இயற்கையும் தம் வசப்படுவதாக உரைக்கப்படுகின்றன. பாம்பு மகுடிக்கு மயங்கி ஆடுவதும், உயிரினங்கள் இறை மறந்து நிற்பதாகவும், பயிர்கள் நல்விளைச்சல் தருவதாகவும் என இசையின் ஆற்றல் பலவாறாகக் குறிப்பிடப்படுகின்றது.

சஞ்சாரம் நாவலிலும், நாதசுரக் கலைஞர்களால் வாழைத்தோட்டத்துக் காய்களைக் கனியாக்கவும், அம்மை நோய்வாய்த்து முத்துமுத்தாகக் கொப்புளமிட்டிருந்த சிறுமியினை நாதசுரம் வாசித்து நோயினைக் குணமாக்கினர். இந்த நம்பிக்கையின் அடிப்படையிலேயே இன்றளவும் அம்மைநோய் வந்தவர்களைக் கோவில் திடலில் படுக்கவைத்து, நாதசுரம் வாசிப்பது நடந்து வருவதாகக் குறிப்பிடப்படுகின்றது.

**இசைக்கருவிகள்:**

இசைக்கருவிகள் பற்றிய செய்திகள் சங்க இலக்கியத்தில் பரவலாகக் காணப்படுகின்றன. இக்கருவிகள் தோற்கருவிகள், துளைக்கருவிகள், நரம்புக்கருவிகள், கஞ்சக்கருவிகள் என வகைப்படுத்தப்படுகின்றன. இவற்றில் குழலும் யாழுமே அக்காலத்தின் முக்கிய இசைக்கருவிகளாகப் பயன்படுத்தப்பட்டுள்ள நிலையினை,

"குழலினிது யாழினிது என்பர் தம்மக்கள்

மழலைச்சொல் கேளா தார்." (குறள் - 66)

என்றவாறு குறிப்பிடும் திருக்குறள் மூலம் நாம் அறிய முடிகின்றது. அக்கால இசைக்கருவிகளில் சிறந்ததாக குழலும், யாழும் போற்றப்பட்டதாலும், இனிமையானவை என்பதாலும் திருவள்ளுவர் இதனைக் குறிப்பிடுகின்றார்.

"குழலும் யாழும் தவிர பேரிகை, படகம், உடுக்கை, மத்தளம், திமிலி, குடமுழா, முழவு, முரசு, பறை, துடி போன்ற பல இசைக்கருவிகள் அக்காலத்தில் இருந்ததெனக் கூறப்படுகின்றது." (தமிழ்நாட்டு சமுதாய பண்பாட்டுக் கலை வரலாறு, ப.83) மேற்குறிப்பிட்டவாறு பலவகையான இசைக்கருவிகள் சங்ககாலம் முதல் வழக்கில் இருந்த செய்தியினை சேதுராமன் அவர்கள் எடுத்துரைக்கின்றார்.

சஞ்சாரம் நாவலில், கொக்கரை, படகம், பேரிகை, குடமுழா, நாதசுரம் முதலான இசைக்கருவிகளினையும் மேலும் இவ்இசைக்கருவிகள் அனைத்தும் கடவுளோடு தொடர்புடைய தெய்வீகக் கருவியாகவும் குறிக்கப்படுகின்றன. மேலும் கோவில்களில் சுவாமி புறப்பாட்டின்போது இசைக்கப்படும் இசைக்கருவிகளாக எக்காளம், திருச்சீரனம், உடலு, கொட்டு, டவுண்டி, மிருதங்கம் போன்ற இசைக்கருவிகள் முழங்கி வர அழகிய முகப்படாம் பூட்டிய யானையினுடைய அம்பாரி முன் செல்லும்போது, நாதசுரமானது வாசிக்கப்படும் என்றவாறு பல்வேறு இசைக்கருவிகளும் முழக்கமிடும்படி தெய்வ ஊர்வலம் நிகழும் என்பதனை இந்நாவல் நமக்கு எடுத்துக்காட்டுகின்றன.

**ஆலய வழிபாட்டில் மங்கல இசை:**

நம் தமிழர் பண்பாட்டில் மங்கல இசை என்று அழைக்கப்படுவது தவிலும், நாதசுரமும் கொண்டு இசைக்கப்படும் இசையாகும். இவ்இசையானது திருக்கோயில்களை மையமாக வைத்தே வளர்ச்சி பெற்றமைக்குப் பல சான்றுகள் உள்ளன.

ஆலயங்களில் அதிகாலை பள்ளியெழுச்சி தொடங்கி, அர்த்த யாமத்திற்குப் பின் சுவாமி பள்ளியறைக்குச் செல்லும்வரை மங்கல இசையானது இசைக்கப்படுகின்றது. ஒவ்வொரு கால பூசைக்கும், கிரியைகளுக்கும் ஏற்ப இராகங்கள் இசைக்கப்படுகின்றன. திருக்கோவிலின் பூசைக்குப் புனிதநீர் கொண்டு வரும்போது மேகராகக் குறிஞ்சிராகமும், ஆலயக்

குடமுழுக்கின்போது தீர்த்த மல்லாரியும் வாசிக்கப்படுகிறது. கோவிலில் தெய்வத்திற்கு தளிகை (நிவேதனம்) எடுத்துவரும்போது தளிகை மல்லாரி வாசிக்கப்படுகிறது. தெய்வங்களுக்கு திருக்கல்யாணம் நிகழ்த்தப்பெறும்போது நாட்டைக் குறிச்சியோ, கல்யாண வசந்தமோ வாசிக்கப்படுகின்றது என்றவாறு ஒவ்வொரு நிகழ்விற்கும் அதற்கேற்றவாறு இசை வாசிக்கப்படுதலை ஆசிரியர் எடுத்துரைக்கின்றார்.

**மல்லாரி வாசித்தல்:**

வீதிகளில் சுவாமி புறப்பாட்டின்போது மல்லாரி வாசித்தல் என்பது மிகவும் சிறப்பாகக் கருதப்படுகின்றது. மல்லாரியில் பல வகைகள் உண்டு.

“மல்லாரியானது இரண்டு அடிகளைக்கொண்டு அமைக்கப்படடிருக்கும். மல்லாரியானது எப்படி இருப்பினும் அவற்றை நட்டபாடை பண்ணாகி கம்பீரநாட்டை எனும் இராகத்தில் இசைக்க வேண்டும் என்பதே நியதியாகும். இந்த இராகத்தில் வீர இரசம் மிகுந்து காணப்படுவதால் இந்த இராகத்தினை நியமித்து இருக்கலாம்.” (தமிழ் இலக்கியங்களில் சமயமும் சமூகமும், ப.510) மேற்கண்ட கூற்றும் இங்கு நோக்கத்தக்கது.

சஞ்சாரம் நாவல், மல்லாரி வாசித்தல் பற்றி எடுத்துரைக்கின்றது. சுவாமி வெளிவீதியில் உலா வரும்போது, மல்லாரியில் ராஜமல்லாரி என்று அழைக்கப்படும் திரிபுடை தாள மல்லாரி வாசித்தலே மிகவும் சிறப்பு பெற்றதாக அமைகின்றது. பெரும்படையானது எழுச்சிக்கொள்வது போல, இதனை வாசிக்கும்போது தொடக்கத்திலேயே மனவெழுச்சியினை மக்களிடையே உருவாக்கிவிடுகின்றது. மேலும் இம்மல்லாரி வாசிப்பின்போது இரண்டு நாதசுரங்களும், ஒரு ஒத்து, நான்கு தவில்கள், மற்றும் மல்லாரிக்கென்றே சில நேரங்களில் நான்கு அல்லது ஐந்து சிறப்புத் தவில்களும் அமைத்து இசைப்பார்கள் என்றவாறு மல்லாரி இசையின் சிறப்பினை விளக்குகின்றது.

**மனித வாழ்வில் இசை:**

இசை என்பது மனித வாழ்வோடு இரண்டறக் கலந்தது. அதனால்தான் மனிதன் இன்பத்தில் இருக்கும்போதும், துன்பத்தில் இருக்கும்போதும் இசைக்கு ஆட்படுகின்றான். இசையின் பிறப்பினை விளக்க முற்படும் அடியார்க்கு நல்லார், “ஒவ்வொரு மனிதனின் உடம்பும் அவனவன் கையளவுக்கு தொண்ணூற்றாறு அங்குலம் ஆகும். இதில் மேலும் கீழும் நாற்பத்தேழரை அங்குலம் விட்டு, இடைப்படும் ஒரங்குலம் மூலாதாரமாக அமைகிறது. இதன் மேலே நான்கு விரல்விட்டு பின்னாதாரம் ஆகிறது. அதில் காற்று நின்று இயங்கும். அந்த அதிர்வில் ஒலி தோன்றுகிறது. அதுவே இசையின் பிறப்பாக அமைகிறது.” (தமிழர் இசை, ப.228) என்றவாறு உடலில் உருவாகும் இசையின் தோற்றத்தினைக் குறித்து விளக்குகின்றார். இசையானது இசைக்கருவிகளை மட்டும் சார்ந்ததில்லை. இது அன்றாட மக்களின் வாழ்வியலோடு தொடர்பு கொண்டதாக அமைகின்றது. எனவேதான் நிலத்திற்கு

ஏற்றாற்போல இசையமைப்பு, இசைக்கருவிகள், இசைப்பயன் எனப் பல்வேறு வகைகளாக இடத்துக்கு இடம் மாற்றம் பெற்றுள்ளது என்பதை அறியமுடிகின்றது. ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் ஏற்படும் கால மாற்றத்தைப்பொறுத்து, மனோ தாள லய கதி மாற்றம் பெறுகின்றன என்பதனை சஞ்சாரம் நாவலில், “பரபரப்பாகத் திரியும் போர் வீரனுக்குள் செயல்படுவது துரித லய கதி, நிதானமாகச் செயல்படும் சாதுவிடம் வெளிப்படுவது விளம்ப லய கதி, இவை இரண்டுக்கும் இடையில் செயல்படும் சாமான்ய மனிதர்களிடம் மத்திய லய கதியும் இருக்கின்றன.” (சஞ்சாரம், ப.230) மேற்கண்டவாறு மனிதர்களை வகைப்படுத்தி அவர்களுக்குள் இருக்கும் இசை உணர்வினையும் வரிசைப்படுத்தி எஸ். ராமகிருஷ்ணன் அவர்கள் குறிப்பிடுகின்றார்.

**இசை ஒப்புமை:**

இசையானது மிகவும் நுட்பம் வாய்ந்தது. இயற்கையோடு இயைந்தது. இவ்வொலியின் தன்மையினை தமது கூரிய நுண்ணறிவினைக்கொண்டு, நன்கு உணரும் ஆற்றல் கொண்டவர்களால் மட்டுமே இசையினை முறைப்படுத்தும் திறம் கொண்டவர்களாக அமைவர். கூர்மையான செவிப்புலமையும், இயற்கையின் முறைகளைக்கண்டு உணரக்கூடிய சிறந்த அறிவாற்றலும் உடையவர்களாலேயே சிறந்த பண்களை அமைத்து, அவற்றை மனதினால் உணர்ந்து சுவைக்க முடியும். இதனை, “சட்ஜமம் மயில் அகவுதலையும், ரிஷபம் மாடு கத்துதலையும், காந்தாரம் ஆடு கத்துவதையும், மத்யமம் அன்றில் பறவை கூவுதலையும், பஞ்சமம் குயில் கூவுதலையும், தைவதம் குதிரை கனைப்பதையும், நிஷாதம் யானை பிளிறுவதையும் ஒத்திருக்கிறது” (சஞ்சாரம், ப.229) என்றவாறு இசையின் ஒவ்வொரு கூறும் ஒவ்வொரு ஒலிக்குறிப்பினைக் கொண்டுள்ள நிலையினை சஞ்சாரம் நாவல் அடையாளப்படுத்துகின்றது.

**பண்கள்:**

நாலாயிரத் திவ்யப் பிரபந்தப் பாடல்கள், மறைந்த பல தமிழிசைப் பண்களைத் துலக்கிக் காண்பதற்கு வாயிலமைத்துக் கொடுக்கும் என்பதற்கு ஐயமில்லை. இதில் காணப்படும் பண்களாக, “இந்தளம், கவ்வாணம், காந்தாரம், குறண்டி, குறிஞ்சி, கொல்லி, கைசிகம், சீகாமரம், செந்திருதி, செருத்தி, தக்கராகம், தக்கேசி, தோடி, நட்டபாடை, நட்டராகம், நாட்டம், நைவளம், பஞ்சமம், பஞ்சுரம், பழஞ்சுரம், பழந்தக்கராகம், பழம்பஞ்சுரம், பாலையாழ், பியந்தை, புறநீர்மை, முதிர்ந்த குறிஞ்சி, மேகராகக் குறிஞ்சி, வியந்தம், வியாழக்குறிஞ்சி என்றவாறு மொத்தம் 29 பண்களைப் பற்றிக் குறிப்பிடுகின்றது. தேவாரத்தில் 23 பண்களைப் பற்றி குறிப்பிடுகின்றது.” (தமிழர் இசை, ப.401)

சஞ்சாரம் நாவலிலும் பல பண்களைப் பற்றியக் குறிப்புகள் ஆங்காங்கே காணப்படுகின்றன. தேவகானம், கரஹப்ரியா ஆகிய பண்களும், மோகனராகம் என்பது

கேட்போருள்ளத்தைக் கசிந்துருகச் செய்வதும், ஆரபிராகம் கேட்போர் மனதில் தங்கம் உருகி ஆறாக ஓடுவதுபோலவும், பழமையானதும் இன்றும் வழக்கில் உள்ளதுமான பண்ணாகிய தோடிராகமானது மனதினை மேகத்தில் சஞ்சரிக்கச் செய்வதாகவும், திமிரி நாயனம், சக்கரவாஹம், ரஞ்சனிராகம் போன்ற பண் வகைகளும், மேலும் தக்கேசி என்ற பழம்பெயர் கொண்ட காம்போதிராகம் என்றவாறு இராகத்தின் வகைகளையும் அவற்றினால் மனதில் ஏற்படும் தாக்கத்தினையும் இந்நாவல் விளக்குகின்றது.

மேலும் இசைக்கலைஞர்களின் திறமையை வெளிக்கொணரும் வகையில் அமைகின்ற பிருகா மற்றும் விரலடி பற்றியும் எடுத்துரைக்கின்றது. இராகத்தினுடைய சொரூபத்தினை ஜீவனோடு வெளிப்படுத்தும் விதமாக பிருகாக்கள் அமைந்து, பாடலின் மெட்டினை மெருகூட்டும் விதமாக இவை அமையும் நுட்பத்தினையும் விளக்குகின்றது.

**நாதசுரப்பயிற்சி:**

ஒவ்வொரு இசைக்கருவியும் அதனை வாசிப்பதற்கானப் பல்வேறு பயிற்சிகளும் பெற்ற பிறகே, அதனை முழுமையாகக் கையாள முடியும். அவ்வகையில் நாதசுரத்தில் எட்டு வகையானப் பயிற்சிகள் உள்ளதனை சஞ்சாரம் நாவல் எடுத்துரைக்கின்றது. தத்தகாரம், தன்னகாரம், துத்தகாரம், அகாரம், வழுக்கு, அசைவு, பிர்கா, விரலடி என்ற பல்வேறான பயிற்சி முறைகள் பற்றி விளக்குகின்றது.

**நாதசுரக் கலைஞர்கள்:**

தமிழர்களுடைய பழம்பெருமை வாய்ந்த இசைக்கருவிகளில் மிகச்சிறந்ததாகக் கருதப்படுவது நாதசுரம் ஆகும்.

“சங்ககால வயிரிலிருந்து நாதசுரம் வளர்ந்திருக்குமா என்று சிந்திக்கலாம். குழல் என்று பொதுப்பெயராகவும் இக்கருவி அழைக்கப்பட்டிருக்கலாம். வங்கியம் என்றும் எழில் என்றும் இது குறிக்கப்பட்டுள்ளதாகத் தோன்றுகிறது.” (தமிழர் இசை, ப.816) என்றவாறு ஏ.என். பெருமாள் அவர்கள் குறிப்பிடுகின்றார்.

நூற்றுக்கணக்கான நாதசுரக் கலைஞர்கள் இக்கலையில் தேர்ச்சி பெற்று சிறந்து விளங்கியுள்ளனர். மேலும் சோழ நாட்டிலே இக்கலை சிறப்புபெற்று விளங்கியது எனலாம். இங்கு சிறப்புற்ற கலைஞர்களாக நாதசுர சக்ரவர்த்தி திருவாவடுதுறை ஜி.ழி. ராஜரத்தினம் பிள்ளை, திருவெண்காடு சுப்ரமணியப்பிள்ளை, றி.ஷி. வீருசாமிப்பிள்ளை, திருவீழிமலை சகோதரர்கள், செம்பனார் கோவில் சகோதரர்கள் போன்ற சிறப்புப்பெற்ற கலைஞர்களை சஞ்சாரம் நாவல் வரிசைப்படுத்துகின்றது.

**முடிவுரை:**

தமிழை இயல், இசை, நாடகம் என மூன்றாகப் பகுத்துக் கூறுவர். இதில் இசைத்தமிழுக்கென்று தனிச்சிறப்பும், மக்களிடையே பெரும் செல்வாக்கும் அன்றுமுதல் இன்றுவரை நிலவிவருவதனை மறுப்பதற்கில்லை.

இவற்றில் மங்கல இசை என்ற சிறப்புப்பெற்றது நாதசுரமும் தவிலுமாகும். இவ்இசைக்கருவிகள், நாட்டுப்புற இசைக்கருவிகளாக இன்றளவும் பெயர்பெற்று விளங்குகின்றது.

நாதசுரமும் தவிலும் தொடக்ககாலத்தில் கோவில்களில் வளர்ச்சிபெற்ற நிலை காணப்படினும், மக்களிடம் கொண்ட பெரும் வரவேற்பினால் எல்லா நிகழ்வுகளிலும் இன்று அரங்கேற்றம் பெறுகின்றன.

இசையின்வழி மக்கள் மனது எளிமையாக வயப்படுகின்றது. எனவே இறை நம்பிக்கை ஊட்டுவதற்கு சமயங்கள் இசையினை ஒரு முக்கியக் கருவியாகக் கையாண்டுள்ளதனை நாம் அறிய முடிகின்றது.

இயற்கையிலிருந்து இசையைக் கண்டறிந்த மனிதன், அதிலிருந்து பிரித்தறிந்து பல்வேறு தாள லயங்களை இணைத்து, தமது நுட்பமான அறிவினால் தனது இன்ப துன்பமென அனைத்து உணர்வுகளையும் அதன்வழி வெளிப்படுத்தி, அதனை சுவைக்கக் கற்றுக்கொண்டதன் வெளிப்பாடே இசைக்கலையின் வளர்ச்சி எனலாம்.

மேற்கண்டவாறு பக்தி நெறியிலும், மக்கள் வாழ்வியலிலும் இசை கொண்டுள்ள நிலைப்பாட்டினைப் பல்வேறு நிலைகளில் சஞ்சாரம் நாவல் நமக்கு எடுத்துரைக்கின்றது.

**துணை நூல்கள்**


1. பெருமாள், ஏ.என், தமிழர் இசை, உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை, முதற்பதிப்பு - 1984.
2. வரதராசனார், மு. திருக்குறள் தெளிவுரை, சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 2021.
3. சேதுராமன், ஜி. தமிழ்நாட்டு சமுதாய பண்பாட்டுக் கலை வரலாறு, ஜே.ஜே. பப்ளிகேசன்ஸ், மதுரை, இரண்டாம் பதிப்பு - 2001
4. பன்னாட்டு ஆய்வுக்கருத்தரங்கம், தொகுதி-2, தமிழ் இலக்கியங்களில் சமயமும் சமூகமும், கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர், பதிப்பு - 2018.
5. ராமகிருஷ்ணன், எஸ். சஞ்சாரம், தேசாந்திரி பதிப்பகம், சென்னை, மூன்றாம் பதிப்பு - 2019.

*Reference;*


1. *Perumal, A.N., Tamil Music, International Institute of Tamil Studies, Chennai, First Edition - 1984.*
2. *Varadarasanar, Mu., Thirukkural - Commentary, Saiva Siddhanta Publishing Society, Chennai, 2021.*
3. *Sethuraman, G., History of Social and Cultural Arts of Tamil Nadu, J.J. Publications, Madurai, Second Edition - 2001.*
4. *International Seminar Proceedings, Volume 2, Religion and Society in Tamil Literature, Kongunadu Arts and Science College, Coimbatore, Edition - 2018.*
5. *Ramakrishnan, S., Sancharam, Desanthiri Publications, Chennai, Third Edition - 2019.*

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

## அறிவிப்பு / Announcement

அன்பான தமிழ்ச் சொந்தங்களே

வணக்கம்.

வரும் 2026, ஜூலை மாதம் வெளிவரும் அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழுக்கான ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

கட்டுரை வந்து சேர வேண்டிய கடைசி நாள் - ஜூலை 10. அதற்கு பின் வரும் கட்டுரைகள் ஜூலை இதழில் இடம்பெறாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

www.aranejournal.com